சுருக்கம்

கால்நடை பராமரிப்பு – கால்நடை பாதுகாப்புத் திட்டம் – கால்நடை முகாம்கள் – 2006–2007–ஆம் ஆண்டில் 5500 முகாம்கள் நடத்துதல் – நிர்வாக ஒப்புதல் மற்றும் செலவுத் தொகை – ரூ.2,75,00,000/– ஒப்பளிக்கப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு , பால்வளம் மற்றும் மீன்வளத் (கா.ப.2) துறை

அரசு ஆணை (நிலை) எண்: 175 நாள்: 6.10.2006

படிக்க

1. அரசு ஆணை (நிலை) எண்.3, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 10.1.2000
2. அரசாணை (நிலை) எண்.94, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்(காப2) துறை, நாள் 6.6.2005.
3. கால்நடை பராமரிப்பு மருத்துவப் பணிகள் ஆணையர் (ம) இயக்குநரின் கடித ந.க.எண். 8523/பிபி3/2005, நாள்: 25.1.2006 மற்றும் 11.7.06.

-----

ஆணை:

தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்களின் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ வசதி அளிப்பதிற்கு ஏதுவாக பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கால்நடை பாதுகாப்புத் திட்டம் 18.1.2000 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

2. இக்கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை 2004–2005இல் செயல்படுத்துவதற்கு பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் நிதி ஒதுக்கீடு செய்து இத்திட்டத்தின்கீழ் 5005 முகாம்கள் நடத்த முகாம் ஒன்றுக்கு ரூ.3,700/– வீதம் மொத்தம் ரூ.1,85,18,500/–ஐ ஒப்பளித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. நடப்பு நிதியாண்டில் (2006–2007) கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முகாம் ஒன்றுக்கு ரூ.5000 வீதம் 5500 முகாம்கள் ரூ.2,75,00,000/– செலவில் நடத்த கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் செயற்குறிப்பு அனுப்பியிருந்தார். இதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.:-

| | | |
|---|---|---|
| i). | 5500 முகாம்களுக்கு விளம்பரம் மற்றும் பிரச்சாரச் செலவினம் (5500 X ரூ.500 வீதம்) | ரூ.27,50,000–00 |
| ii). | 5500 முகாம்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் கட்டண செலவினம் (5500 X ரூ.300 வீதம்) | ரூ.16,50,000–00 |
| iii). | 5500 முகாம்களுக்கு மருந்துகள் செலவினம் (5500 X ரூ.3000 வீதம்) | ரூ.1,65,00,000–00 |
| iv). | 5500 முகாம்களுக்கு கருச்சிதைவு நோய் தடுப்பு மருந்து செலவினம் (5500 X ரூ.800 வீதம்) (Brucellosis) | ரூ.44,00,000–00 |
| (v). | 5500 முகாம்களுக்கு கன்றுகள் பேரணி நடத்துவதற்கான செலவினம் (5500 X ரூ.400 வீதம்) | ரூ.22,00,000–00 |
| | மொத்தம் (5500 X ரூ.5000 வீதம்) | ரூ.2,75,00,000–00 |
| | (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தி ஐந்து இலட்சம் மட்டும்) | |

4. மேற்கண்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் மற்றும் இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து 2006–2007ஆம் ஆண்டில் சென்ற ஆண்டு நடத்தப்பட்ட முகாம்கள் போன்றே நடப்பு நிதி ஆண்டில் (2006–2007) கால்நடை பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 5500 முகாம்கள் நடத்த முகாம் ஒன்றுக்கு ரூ.5000 வீதம் மொத்தச் செலவினத் தொகை ரூ.2,75,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தி ஐந்து லட்சம் மட்டும்) அரசு ஒப்புதலளிக்கிறது. இதில் கருச்சிதைவு நோய் தடுப்பு மருந்தினை, மருந்துக்களுகென ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும், முகாம்களை செப்டம்பர் 2006 முதல் டிசம்பர் 2007 வரை நடத்தலாம் என்றும், ஒரு ஊராட்சி ஒன்றியத்தில்

மாதம் ஒரு முகாமுக்கு அதிகமாகாமல் நடத்தலாம் என ஆணை வெளியிடப்படுகிறது.

5. மேலே பத்தி 4ல் உள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவுத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2403.00 – கால்நடை வளர்ப்பு – 101, கால்நடை மருத்துவப் பணிகளும் கால்நடை சுகாதாரமும் – பத்தாவது ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – K.R..கால்நடை பாதுகாப்புத் திட்டம்

| | |
|---|---|
| 08 விளம்பரமும் பிரச்சாரமும் 01 விளம்பரக்கட்டணம் (து.தொ.கு.எண்.2403–00–101–K.R.0805) | 49,50,000 |
| 24 பொருட்களும் வழங்கலும் (து.தொ.கு.எண்.2403–00–101– K.R 2401) | 16,50,000 |
| 66 மருந்துகள் (து.தொ.கு.எண்.2403–00–101– K.R 6603) | 2,09,00,000 |
| மொத்தம் | 2,75,00,000 |

6. மேலே கூறப்பட்டுள்ள கணக்குத் தலைப்பில் வரவு செலவு திட்டம் 2006–07ல் ரூ.1,89,18,000/– மட்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.85,82,000/– " புதுத்துறைப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். ஒப்புதல் கிடைக்கும் வரையில் இச்செலவினத்தை முதற்கண் எதிர்பாரா செலவின நிதியில் மேற்கொள்ளப்பட வேண்டும். முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ I) துறையால் பிறப்பிக்கப்படும். எதிர்பாரா நிதியிலிருந்து முன்பணம் பெற தேவையான விண்ணப்பத்தை நிதி (வரவு செலவு – I) துறைக்கு அரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் (ம) ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் 2006–2007 – ம் ஆண்டிற்கான துணை மதிப்பீட்டில் சேர்க்கவும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.எண். 59778 /காப(ம)மீ / 2006, நாள் 4.10.2006– கூடுதல் நிதி ஒதுக்கப்பேரேடு எண். 665 (அறுநூற்று அறுபத்தி ஐந்து) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

லீனா நாயர்
அரசுச் செயலாளர்

பெறுநர்
கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர்
(ம) இயக்குநர், சென்னை–6.
பதிவாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்,
சென்னை –51.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பள கணக்குஅலுவலர், சென்னை–35
இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, தூத்துக்குடி,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
நகல்
நிதித்(கா.ப(ம)மீ . வ.செ.பொ I / வ.செ.பொ. 4, துறை, சென்னை–9
மாண்புமிகு முதல் அமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் கால்நடை பராமரிப்பு அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
செயலாளரின் தனிச் செயலர், கால்நடை பராமரிப்பு, பால்வளம்
மற்றும் மீன்வளத்துறை, சென்னை – 9.
இகோ/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்